அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆய்வுக்கு உட்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 227, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

227—

புதைவடம்

***47691—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிப்பட்டி தொகுதி, மேகமலை ஊராட்சிக்குட்பட்ட மலைக் கிராமங்களுக்கு புதைவடம்மூலம் மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஆண்டிப்பட்டி தொகுதி, மேகமலை ஊராட்சிக்குட்பட்ட மலைக் கிராமங்களுக்கு புதைவடம்மூலம் மின்சாரம் வழங்க ஆய்வு செய்ததில், அந்தப் பகுதியானது பாதுகாக்கப்பட்ட மற்றும் அடர்ந்த வனப் பகுதி என்ற காரணத்தினால், அந்தப் பகுதிக்கு புதைவடம்மூலம் மின்சாரம் கொண்டுசெல்ல இயலாது என அறியப்பட்டது. இருந்தபோதிலும், அங்குள்ள சுமார் 1,036 வீடுகளுக்கு சூரிய ஒளி மின் சக்திமூலம் மின்சாரம் வழங்குவதற்கு, ரூபாய் 1.55 கோடி செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நிருவாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு பரிசீலனையில் உள்ளன. ஒப்பந்தப் புள்ளி இறுதி செய்யப்பட்ட பின்னர், பணிகள் துவங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

2015 செப்டம்பர் 4]

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் குலத்து பொன் விளக்கே, பேரரசியே, எங்கள் அம்மா அவர்களே, உங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இயலாது, முடியாது, தெரியாது, நடக்காது என்ற இந்த வார்த்தைகள் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் இல்லவே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் 2011-ல் மின்சாரமே இல்லை; ஆனால் இன்றைக்கு மின் மிகை மாநிலமாக உயர்த்திக் காட்டியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த 4 வருடங்களாக மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறேன். இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், அந்தப் பகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோதுதான் மின்சாரம் வழங்கப்பட்டது. யானைகளால் அங்கே மின் கம்பங்கள் இடிக்கப்பட்டதால், மீண்டும் மின்சாரம் வழங்க முடியாத நிலை இருக்கிறது. அங்கு கேபிள் மூலமாக மின்சாரம் வழங்கினால், அந்தப் பகுதியிலே இருக்கின்ற எஸ்டேட் உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்புவாசிகளுக்கு மின்சாரம் கிடைக்க ஏதுவாக இருக்கும். அப்படி கேபிள்மூலம் மின்சாரம் வழங்கப்படும்போது, அங்குள்ள எஸ்டேட் உரிமையாளர்கள் அரசுக்கு நன்கொடை வழங்கவும் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்து, அதற்கு ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிதி ஒரு பிரச்சினையே அல்ல. அந்தக் குக்கிராமங்களுக்கு மின் இணைப்பு வழங்குவதற்கு தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் தயாராக இருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்தெந்தப் பகுதிகளில் புதிய மின் இணைப்பு வழங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறதோ, அவை அனைத்திற்கும் முழுமையாக மின் இணைப்பு வழங்கவேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறன்றார்கள். அந்தப் பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. ஆண்டிப்பட்டியிலிருந்து மேகமலை 35 கிலோ மீட்டர் தொலைவிலே இருக்கிறது. மேகமலை

ஊராட்சிக்குட்பட்ட மஞ்சநூத்து முதல் வெள்ளிமலை வரைதான் அடர்ந்த வனப் பகுதி, thick forest ஆக இருக்கிறது. அந்த அடர்ந்த வனப் பகுதிகளில் பணி செய்யவேண்டுமென்று சொன்னால், மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறையின் அனுமதியைப் பெறவேண்டியிருக்கிறது. அப்படிப் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளில் எந்த வேலைகளையும், வளர்ச்சிப் பணிகளையும் செய்வதற்கு மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள உள்ள வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அனுமதி கொடுப்பதில்லை. ஆகவேதான், மின்சார வசதி செய்வதற்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளுக்கான பணிகளைத் தொடங்குவதற்கு அங்கே அனுமதி இல்லாத காரணத்தால்தான், கம்பங்கள்கூட அமைக்க முடியவில்லையே தவிர, நிதி ஒரு பிரச்சினையே அல்ல.

ஆகவேதான், சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையின் அனுமதி பெறமுடியாத அப்படிப்பட்ட கிராமங்களுக்கு சூரிய ஒளி மின் சக்தி மூலமாக மின் இணைப்பு கொடுத்தாக வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். தமிழ்நாட்டிலே மின்சக்தி பெற முடியாத அடர்ந்த வனப் பகுதியில் இருக்கின்ற 105 குக்கிராமங்களிலே 4,764 குடியிருப்புகள் இருக்கின்றன. அங்குள்ள அனைத்துக் குடியிருப்புகளுக்கும், மேகமலையை உள்ளடக்கிய அனைத்துப் பகுதிகளுக்கும் சூரிய ஒளி மின் சக்தி மூலமாக மின் இணைப்பு வழங்குவதற்காக 7.13 கோடி ரூபாய் செலவிலே திட்டம் தயாரிக்கப்பட்டு, அதற்கான பணிகள் விரைவாக முடிக்கப்படவிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மேகமலை கிராமத்திற்கும் இப்போது 1.55 கோடி ரூபாய் செலவிலே சூரிய ஒளி மின் சக்திமூலம் மின் இணைப்பு வழங்கப்படவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தபோதிலும், தமிழ்நாடு அரசும், தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகமும் தொடர்ந்து மத்திய அரசின் வனத் துறை அனுமதியைப் பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சூரிய ஒளி மின் சக்தி அமைக்கின்ற அந்தப் பணியையும், அனுமதி பெறுகின்ற முயற்சிகளையும் அரசு செய்து வருகிறது. அப்படி அனுமதி கிடைக்கும்பட்சத்தில், அந்தப் பகுதியிலே மின்சார வசதி செய்வதற்குத் தடை ஏதுமில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2015 செப்டம்பர் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

முற்பகல் 10-10

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூரிய ஒளி மின்சாரம் வழங்க முடியும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.த. செல்லப்பாண்டியன் அவர்கள்.

திரு. சி.த. செல்லப்பாண்டியன்: மங்கல கயிற்றிற்குத் தங்கம் தந்து, தாய் வீட்டுச் சீதனமாகப் பணமும் தந்த மங்கையர் திலகமே! அம்மா உணவகம் தந்த அன்னபூரணியே! எதிரிகளின் சிம்ம சொப்பனமே! (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றரை கோடி தொண்டர்களின் இதயத்தில் குடிகொண்டிருக்கும் எங்கள் குல சாமியே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி நகரம் பெரு நகரமாகவும், அதிகமான ஜனத்தொகை மற்றும் தொழில்வளம் மிக்க நகரமாகவும் விளங்கிக்கொண்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியிலே மின் பழுது அடிக்கடி ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. அதை நிவர்த்தி செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியிலே ஏற்பட்டிருக்கிற மின் தடை குறித்து, அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்தப் பழுதுகளைச் சீரமைப்பதற்கான முயற்சிகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்டா மாவட்டங்களில் கடந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சியின் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுக்கக்கூடிய வகையில், இலவச மின்சார இணைப்பு கொடுக்கக்கூடிய எண்ணிக்கையை உயர்த்த அரசிடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைப்பதற்கு முன்பாகவே, அவர் குறிப்பிட்ட அந்தப் பகுதியிலே பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பகுதியிலே திட்டமிட்ட அளவிற்கு சற்று அதிகமாகவே இலவச மின்சார இணைப்பு இந்த ஆண்டும்கூட கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமத்தி வேலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, பரமத்தி வட்டம், வீரணம்பாளையத்தில் அமைந்துள்ள துவக்கப் பள்ளிக் கட்டடத்தின்மீது மின் வழித் தடம் செல்கின்றது. குழந்தைகள், பெற்றோர்-ஆசிரியர் சங்கத் தலைவர்கள், ஆசிரியப் பெருமக்கள் என அனைவரும் பள்ளிக் கட்டடத்தின்மீது செல்கின்ற அந்த மின் வழிப் பாதையை மாற்றித் தந்திட வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைச் சரிசெய்வதற்கு மின் துறை ரூ.2 இலட்சம், ரூ.3 இலட்சம் நிதி வேண்டுமென்று கேட்கிறது. இதை அரசே ஏற்றுக்கொண்டு, அந்தப் பள்ளியின்மீது செல்கின்ற மின் வழிப் பாதையை மாற்றித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

2015 செப்டம்பர் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய கோரிக்கையை எழுத்துபூர்வமாகக் கொடுத்தார்களேயானால், அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 228, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல், மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

228—

நெல் ஆராய்ச்சி நிலையம்

***54798—திரு. துரை. மணிவேல்:**

மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியப் பகுதியில் நெல் ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தின்போது, வேளாண்மைத் துறை கேள்விக்கு பதிலளிக்கக்கூடிய வாய்ப்பை எனக்கு வழங்கிய தமிழ் மக்களின் இதயத்தில் வீற்றிருக்கின்ற தமிழ்நாட்டின் நிரந்தர முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, எனது பதிலைச் சமர்ப்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)